மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
நத்தம்.
முன்னிலை : திருமதி.ஜா.ஆ.ஃப்ரீன் பேகம், **M.Com., L.L.M.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நத்தம்.
2026ம் ஆண்டு ஜூன் திங்கள் 30ம் நாள் செவ்வாய்கிழமை
திருவள்ளுவராண்டு 2057 ஸ்ரீபராபவ வருடம், ஆனி திங்கள் 16ம் நாள்

ஆண்டுபட்டிகை வழக்கு எண்.66/2026
CNR No.TNDG100004822026

குற்றமுறையிடுபவர் – காவல் சார்பு ஆய்வாளர்
நத்தம் காவல் நிலைய
குற்ற எண்: 158/2026

எதிரியின் பெயர் – பழனியாண்டி 37/2026
த/பெ.உத்தன்
மங்களப்பட்டி, சிரங்காட்டுப்பட்டி,
நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம்.

**Case Summary**

Statement as per rule 106 of Criminal rules of practice, 2019

| S.No. | Description | Details |
|---|---|---|
| 1. | Serial Number | C.C.No.66/2026 |
| 2 | Name of the Police station and Crime Number | Natham Police Station Cr.No.158/2026 |
| 3 | Name of the accused | பழனியாண்டி |
| 4 | Father's Name | உத்தன் |
| 5 | Occupation | கூலி |
| 6 | Residence | மங்களப்பட்டி, சிரங்காட்டுப்பட்டி, நத்தம் தாலுகா, திண்டுக்கல் மாவட்டம். |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.30 17:54:32 +0530

| | | |
|---|---|---|
| 7 | Age | 37/2026 |
| 8 | Date of occurence | 21.03.2026 |
| 9 | Date of Complaint | 21.03.2026 |
| 10 | Date of apprehension | 21.03.2026 |
| 11 | Date of release on bail | 21.03.2026 |
| 12 | Date of commitment | -- |
| 13 | Date of questioning and plea of the accused | On 29.06.2026 charges under Sections 4(1)(C) TNP Amendment Act framed against the accused. The accused pleaded not guilty, denied the allegations as false, and claimed to be tried |
| 14 | Date of commencement of trial The date of examination – in chief and cross examination of a witness | <table><tr><th>witness</th><th>Chief</th><th>Cross</th></tr><tr><td>PW 1</td><td>29.06.2026</td><td>29.06.2026</td></tr><tr><td>PW 2</td><td>29.06.2026</td><td>29.06.2026</td></tr></table> |
| 15 | The date of examination of the accused under section 313 of the code – closed of trial | 30.06.2026 |
| 16 | sentence on order | எதிரி மீதான பிரிவு 4(1)(C)TNP Amendment Actன் கீழான குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை பிரிவு 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக |

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:54:37 +0530

| | | |
|---|---|---|
| | | உத்தரவிடப்படுகிறது. **இவ்வழக்கில் சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.** |
| 17 | Service of copy of Judgment or finding on accused | No. The Judgment was uploaded on CIS portal and made available in E – Courts. |
| 18 | Explanation of delay | There is no inordinate in the disposal of the case. |
| 19 | Property order | No case property was seized and hence no property order passed. |

இவ்வழக்கு 11.05.2026ம் தேதி கோப்புக்கு எடுக்கப்பட்டு இறுதியாக 30.06.2026 அன்று விசாரணைக்கு வந்த போது அரசுத் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை–I திருமதி. P. அமர்ஜோதி அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் திரு.K.வெங்கடேஷ் வழக்கறிஞரும் ஆஜராகி இருதரப்பிலும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டு வழக்காவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

## <u>தீர்ப்புரை</u>

இவ்வழக்கானது சட்டப்பிரிவுகள் எதிரி மீது இ.த.ச பிரிவு 4(1)(C)TNP Amendment Actன் கீழ் நத்தம் காவல் நிலைய காவல் சார்பு ஆய்வாளர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. இதற்கு பின்பு பாரதிய குடிமக்கள் பாதுகாப்பு சட்டம் 2023 (The Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNSS என்றும், பாரதிய நியாய சட்டம் 2023 (The Bharatiya Nyaya Sanhita, 2023) ஆனது சுருக்கமாக BNS என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:54:42 +0530

2) **குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் –**

கடந்த 21.03.2026ம் தேதி 09.00 மணிக்கு செந்துறையில் உள்ள மங்களப்பட்டி பிரிவில் எதிரி எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் சுயலாப நோக்கம் கருதி 180ML அளவு கொண்ட Mens club brandy – 26 பாட்டில்களை சில்லறை விற்பனை செய்ய வைத்திருந்ததாக நத்தம் காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் 21.03.2026ம் தேதி பிரிவு 4(1)(C) TNP Amendment Actன் கீழ் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் ஆண்டு பட்டிகை வழக்கு எண் – 66/2026 என கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி முன்னிலையானவுடன், அரசு தரப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் BNSS, 2023 பிரிவு 230–ன் கீழ் 05.06.2026ம் தேதி அன்று இலவசமாக வழங்கப்பட்டது.

4) குற்றப்பத்திரிக்கையில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளைப் பொறுத்து, இரு தரப்புக்கும் போதிய கால அவகாசம் வழங்கப்பட்டு, இரு தரப்பையும் கேட்டும், எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் குறித்தும் ஆவணங்களைப் பரிசீலனை செய்த வகையில் எதிரி மீது பிரிவு 4(1)(C) TNP (Amendment) Actன் கீழ் 29.06.2026ம் தேதியன்று பிரிவு 263 BNSS –ன் கீழ் தமிழில் விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்து குற்றவாளி இல்லை என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிய விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

5) அரசு தரப்பில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் சாட்சிகளாக விசாரிக்கப்பட்டனர். அ.த.சா.ஆ.1 முதல் அ.த.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**6) அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரிய வரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு –**

7) கடந்த 21.03.2026ம் தேதி 09.00 மணிக்கு செந்துறையில் உள்ள மங்களப்பட்டி பிரிவில் எதிரி எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் சுயலாப நோக்கம் கருதி 180ML அளவு கொண்ட Mens club brandy – 26 பாட்டில்களை சில்லறை விற்பனை செய்ய வைத்திருந்ததாக அ.சா.1 கிருபாகரன் என்பவர் எதிரி மீது நடவடிக்கை எடுக்க அ.த.சா.ஆ.1 தனிஅறிக்கை பதிவு செய்துள்ளார்.

8) சார்பு ஆய்வாளர் அ.சா.2 மலைச்சாமி வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு நத்தம் காவல் நிலைய தலைமைக் காவலர் 1307 திரு.கிருபாகரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் கொடுத்த தனி அறிக்கையை பெற்று அதன் தன்மைக்கேற்ப நத்தம் காவல் நிலையக் குற்ற எண்.158/2026 சட்டப் பிரிவு 4(1)(C) TNP Amendment Act 2024ன் கீழ் வழக்கு பதிவு செய்து அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை தயார் செய்து சார்பு ஆய்வாளர் திரு.கார்த்திகேயன் அவர்கள் எதிரி பழனியாண்டி என்பவரை காரணம் கூறி கைது செய்து தக்க நிலைய பிணையில் விடுவித்து வழக்கு சொத்துக்களான 180 ML அளவுகொண்ட Mens club Brandy 26

J.AAFREEN BEGUM,
M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:54:54 +0530

பாட்டில்களை அன்றையதினம் 10.15 மணிக்கு சாட்சிகளான நத்தம் காவல் நிலைய தலைமை காவலர்கள் 1307 திரு.கிருபாகரன் மற்றும் 739 திரு.அழகுராஜ் ஆகியோர்கள் முன்னிலையில் அ.த.சா.ஆ.4 அத்தாட்சியில் கைப்பற்றி வழக்கு சொத்துக்களை கொட்டி அ.த.சா.ஆ.5 அழித்து அழிப்பு சான்று தயார் செய்து சாட்சிகள் திரு.கிருபாகரன், திரு.அழகுராஜ் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் தயார் செய்து இவ்வழக்கு விசாரணை முடித்து எதிரி பழனியாண்டி என்பவர் மீது கடந்த 30.04.2026ம் தேதி 4(1)(C) TNP Amendment Act 2024ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

9) பதிவு செய்யப்பட்ட அரசு தரப்பு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமான சங்கதிகளை குறித்து பிரிவு 351(1)(b) of BNSS, 2023—ன் கீழ் எதிரியிடம் எடுத்துக்கூறி விளக்கி வினவியபோது அரசுத்தரப்பு சாட்சியம் பொய் என்றும், தனது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்.

10) அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்து எதிரியிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டுள்ளது என்றும், வழக்கு சொத்தை சில்லறை விற்பனை செய்யவே எதிரி அவரது உடைமையில் வைத்திருந்தார் என்றும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்கவேண்டும் என்றும் வாதிட்டார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:54:58 +0530

11) எதிரி தரப்பில், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், வழக்கு சொத்திற்கும் எதிரிக்கும் சம்பந்தமில்லை என்றும், இவ்வழக்கு எதிரி மீது புள்ளியல் கணக்கிற்காக போடப்பட்டுள்ளது என்றும், இவ்வழக்கில் தொடர்புடைய அனைத்து ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்யப்பட்டது என்றும், மேலும், இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி வழக்கை சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், எனவே, எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென்றும் வாதிடப்பட்டுள்ளது.

12) <u>**தீர்மானிக்கப்பட வேண்டிய பொருண்மை:**</u>

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்,

1) அரசு தரப்பில் எதிரி மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பால் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதும்,

2) அவ்வாறு நிரூபணம் செய்யப்பட்டால் எதிரிக்கு கிடைக்கக்கூடிய தண்டனை குறித்த விபரம் என்ன? என்பதேயாகும்.

13) <u>**தீர்வு**</u>

13.1) கடந்த 21.03.2026ம் தேதி 09.00 மணிக்கு செந்துறையில் உள்ள மங்களப்பட்டி பிரிவில் எதிரி எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் சுயலாப நோக்கம் கருதி 180ML அளவு கொண்ட Mens club brandy – 26 பாட்டில்களை சில்லறை விற்பனை செய்ய வைத்திருந்தார் என்பதை அரசு தரப்பில் நிரூபணம் செய்யும் பட்சத்தில் தான் எதிரிக்கு அவர் தரப்பை

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

நிரூபணம் செய்யவேண்டிய பொறுப்பு ஏற்படும்.

13.2) எதிரி தரப்பில் அ.சா.1 ரோந்து பணியில் ஈடுபடவில்லை என்றும், சம்பவயிடத்தில் இருந்து வழக்கு சொத்துக்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்படவில்லை என்றும், இது அரசு தரப்பு வழக்கை முற்றிலும் பாதிப்பதாக உள்ளது என்றும் எடுத்துரைத்தார். இது குறித்து பரிசீலனை செய்ததில் அ.சா.1 தனது முதல் விசாரணையில் "கடந்த 21.03.2026ம் தேதி காலை 9.00 மணிக்கு நானும், என்னுடன் பணிபுரிந்த தலைமைக் காவலர் 739 திரு.அழகுராஜ் என்பவரும், சார்பு ஆய்வாளரின் உத்தரவின்பேரில் போதைப்பொருள் குற்றத்தடுப்பு சம்பந்தமாக நத்தம் பகுதிகளில் ரோந்து செய்து கொண்டிருந்தபோது கிடைத்த ரகசிய தகவலின் பேரில் செந்துறை மங்களப்பட்டி பிரிவில் ஒரு நபர் அரசு அனுமதியில்லாமல் சில்லறையில் மதுபானங்களை விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின்பேரில் சம்பவ இடத்தில் சென்று பார்த்தபோது எங்களைப் பார்த்ததும் ஓட முயன்றவரை பிடித்து விசாரணை செய்தபோது அவர் பெயர் பழனியாண்டி, வயது 37, த/பெ.உத்தன், மங்களப்பட்டி, சிரங்காட்டுபட்டி, நத்தம் என்றும் கூறினார்" என்று தெரிவித்துள்ளார்.

13.3) காவலர்கள் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றும், ரோந்து பணிக்கு சென்றதற்கான நாட்குறிப்பு நீதிமன்றத்தில் தாக்கல் இல்லை என்றும் எனவே, காவலர்கள் ரோந்து பணியில் ஈடுபடவில்லை என்றும் வாதத்தை முன்வைத்தார். அவரின் வாதங்கள் குறித்து பரிசீலனை செய்த வகையில் அ.சா.1 தனது சாட்சியத்தில் "பொதுவாக ரோந்து பணிக்கு செல்லும்போது பொது நாட் குறிப்பில் அதை பதிவு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:55:10 +0530

செய்துவிட்டு செல்வது வழக்கம் என்றால் சரியல்ல" என சாட்சியமளித்துள்ளார் என்றும், புலன்விசாரணை அதிகாரி அ.சா.2 மலைச்சாமி தனது சாட்சியத்தில் "ரோந்து பணிக்கு சென்றது தொடர்பாக பொது நாட்குறிப்பில் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பதிவு செய்யப்பட்ட பொது நாட்குறிப்பை சார்பு ஆய்வாளர் விசாரணையில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல" என சாட்சியமளித்துள்ளார் என்றும் சுட்டிக்காட்டி, எதிரி தரப்பில் பொது நாட்குறிப்பு இவ்வழக்கில் தாக்கல் இல்லை என்றும், போலீசாரால் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றும், எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்படவில்லை என்பதால் தான் மேற்படி நடைமுறைகள் எடுக்கப்படவில்லை என்றும், அதனால் வழக்கு சொத்து எதிரியிடமிருந்து தான் கைப்பற்றப்பட்டது என்பது நிரூபணம் செய்யப்படவில்லை என்று வாதங்கள் முன்வைக்கப்பட்டது. பொது நாட்குறிப்பு தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் மட்டும் அரசு தரப்பு வழக்கு பாதிப்படைந்துள்ளதாக எடுத்துக்கொள்ள முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13.4) எதிரி தரப்பில் சம்பவ இடம் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்ற வாதம் முன்னிடப்பட்டது. இது குறித்து பரிசீலனை செய்ததில், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் " சம்பவ இடமாக மங்களப்பட்டி பிரிவு அருகே என்று தெரிவித்துள்ள நிலையில் அது பொது வெளியா அல்லது கடையா என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல, பேருந்து நிறுத்தம் என்று குறிப்பிட்டுள்ளேன். கைப்பற்றப்பட்ட மதுபானங்கள் அனைத்தும் அரசு

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:55:15 +0530

மதுபான கடையை சார்ந்தது என்றால் சரிதான்" என்று தெரிவித்துள்ளார். அ.சா.2 தனது சாட்சியத்தில் "ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக இல்லை என்றால் சரிதான். தனிநபர் சாட்சி யாரும் இவ்வழக்கில் விசாரிக்கப்படவில்லை என்றால் சரிதான்" என சாட்சியமளித்துள்ளதை சுட்டிக்காட்டியும் சம்பவ இடமானது பொது மக்கள் அதிகம் கூடும் இடம் என்றும், எதிரி மதுபானம் சில்லறை விற்பனை செய்ததாக பொது மக்கள் யாரும் தனிப்புகார் அளிக்கவில்லை என்றும், வாதங்களை முன்னிட்டார்.

13.5) மேலும் எதிரி தரப்பில் எதிரி மதுபானம் விற்பனை செய்ய வைத்திருந்ததாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது முற்றிலும் தவறானது என்றும், வழக்கு பதிவு செய்யவே விற்பனைக்காக வைத்திருந்ததாக தெரிவித்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று வாதிட்டார். அ.சா.1 தனது சாட்சியத்தில் "கடந்த 21.03.2026ம் தேதி 09.00 மணிக்கு எதிரியிடமிருந்து வெள்ளைநிற பிளாஸ்டிக் சாக்குப்பையை பார்த்தபோது, அதில் Mens club brandy – 26 பாட்டில்கள் இருந்தது. மேற்படி எதிரியை என்பவரை விசாரித்தபோது அவர் எவ்வித அரசு அனுமதியும் இல்லாமல் லாப நோக்கம் கருதி சில்லறை விற்பனை செய்ய வைத்திருந்ததாக கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டவரை மேற்படி மதுபாட்டில்களுடன் 18.00 மணிக்கு நிலையம் கொண்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதன்பின் சார்பு ஆய்வாளர் எதிரியை கைது செய்து அத்தாட்சியில் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது" என சாட்சியம் அளித்துள்ளார்.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:55:26 +0530

13.6) எதிரி மதுபானங்கள் விற்பனை செய்தாரா என்பதை காண வேண்டியுள்ளது. இதுகுறித்து சாட்சியங்கள் மற்றும் ஆவணங்கள் தாக்கல் குறித்து பார்வையிட்டதில், அ.சா.1 தனது குறுக்கு விசாரணையில் " எதிரி யாரிடம் இருந்து வாங்கி, யாருக்கு விற்பனை செய்தார் என்றும் எவ்வளவு ரூபாய்க்கு விற்பனை செய்தார் என்றும் விபரங்கள் குறிப்பிடப்படாமலும், அவரிடம் இருந்து ரூபாய் நோட்டுகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரிதான்" என்று தெரிவித்துள்ளார். புலன்விசாரணை அதிகாரியான அ.சா.2 தனது சாட்சியத்தில் "கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்களை எதிரி எங்கிருந்து வாங்கினார், எவ்வளவு தொகைக்கு வாங்கினார் போன்ற விபரங்கள் வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். யாருக்கு விற்பனை செய்ய வைத்திருந்தார், எவ்வளவு தொகைக்கு, எவ்வளவு லாபத்திற்கு விற்பனை செய்ய வைத்திருந்தார் என்ற விபரமும் வழக்கில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்" என்று தெரிவித்துள்ளார். எதிரி தரப்பில் மேற்படி விபரங்கள் எதுவும் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும், உண்மையில் வழக்கு சொத்துக்களை எதிரி சில்லறை விற்பனை செய்ததற்கு ஆதாரம் இல்லை என்றும், அதனால் அரசு தரப்பு வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றும் எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது. மேற்படி வாதங்கள் ஏற்புடையதாகவே உள்ளது.

13.7) புலன்விசாரணை அதிகாரி அ.சா.2 தனது சாட்சியத்தில் "எதிரி தாமாக முன்வந்து மதுபானங்களை எடுத்துக் கொடுத்ததாக சொல்லும் நிலையில் எந்த இடத்தில் இருந்து எடுத்துக் கொடுத்தார் என்ற விபரம் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.... எதிரியிடம்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:55:30 +0530

இருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டு இருந்தால் அதற்கான புகைப்படத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் அவ்வாறு இல்லை என்பதால்தான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அதை போல் அழிப்பு செய்ததற்கான புகைப்படமும் அல்லது வீடியோ ஆதாரங்களும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு இல்லை என்பதால்தான் தாக்கல் இல்லை என்றாலும் சரியல்ல... என்று தெரிவித்துள்ளார். இது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாகவே உள்ளது.

13.8) எதிரி தரப்பில் வழக்கை நிரூபணம் செய்ய தேவையான விபரங்கள் எதுவும் குற்ற இறுதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றும், தனிநபர் சாட்சி யாரும் விசாரணை செய்யப்படவில்லை என்றும், எதிரி விற்பனைக்காக தான் மதுபானங்களை வைத்திருந்தார் என்பது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், உண்மையில் வழக்கு சொத்துக்கள் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டிருந்தால் அதை உரிய முறையில் நீதிமன்றத்தில் ஆஜர் செய்திருப்பார் என்றும், வழக்கு சொத்துக்களின் புகைப்படம் தாக்கல் இல்லை என்றும், வழக்கு எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றும் வாதிட்டார். இவ்வழக்கில் தனிநபர் சாட்சியாக பொது மக்கள் யாரும் விசாரிக்கப்படவில்லை. மேலும், நுகர்வோர் ஒருவர் சட்டப்படி குறிப்பிட்ட அளவு மதுபானங்களை கைவசம் வைத்திருக்க அனுமதி உள்ள நிலையில், இது சில்லறை விற்பனைக்காகவே வைக்கப்பட்டிருந்தது என்பதற்கான எவ்வித விற்பனை சாட்சியமும் அரசு தரப்பில் தாக்கல் இல்லை. இதன்மூலம் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது போல் சம்பவம்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:55:34 +0530

நடைபெற்றதா என்பதே சந்தேகத்திற்குரியதாக உள்ளது. எனவே எதிரி தரப்பு மேற்படி வாதங்கள் ஏற்புடையதாகவே உள்ளது.

13.9) மேலும் எதிரி தரப்பில் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டப்படி தனிநபர் ஒருவர் 4.5 லிட்டர் வரையிலான IMFS மதுபானம் தனது சுயதேவைக்கு வைத்துக்கொள்ளலாம் என்றும், இந்த வழக்கில் எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் மதுவின் அளவு மேற்படி 4.5 லிட்டருக்கும் குறைவானது என்றும், எனவே எதிரி மேற்படி சட்டப்பிரிவின் கீழ் குற்றவாளியாக கருத இயலாது என்றும் எடுத்துரைத்ததார். இவ்வழக்கில் எதிரி மீது தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறித்து பரிசீலனை செய்ததில் எதிரி அரசின் எவ்வித அனுமதியுமின்றி 180ML அளவு கொண்ட Mens club Brandy 26 பாட்டில்களை விற்பனை செய்ய வைத்திருந்தார் என்பது தான். மேற்படி 26 பாட்டில்களில் 4.6 லிட்டர் வரும் என்றும், வழக்கு பதிவு செய்யவே 26 பாட்டில்கள் வைத்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் எடுத்துரைக்கப்பட்ட வாதம் ஏற்புடையதாகவே உள்ளது. மேலும் முதல் தகவல் அறிக்கையில் மூடி திருகிய நிலையில் லேபில்கள் சேதம் அடைந்த நிலையில் மதுபான பாட்டில்கள் இருந்ததாகவோ, பாட்டிலின் கொள்ளளவில் மாறுபாடுகள் இருந்ததாகவோ குறிப்பிடப்பட்டவில்லை என்றும், அரசு தரப்பு சாட்சிகள் பாட்டிலின் கொள்ளளவில் மாறுபாடுகள் இல்லை என்றும், 180 ML அளவிலேயே இருந்தது என்றும் சாட்சிகள் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், அதனால் எதிரி சில்லறை விற்பனை செய்தார் என்பது நிரூபணம் செய்யப்படவில்லை என்றும், எதிரி மதுவை சில்லறை விற்பனை செய்தார் என்பதற்கு ஆதாரமாக விற்ற பணம்

என்றோ, யாருக்கு, எவ்வளவு லாபத்திற்கு விற்றார் என்றோ குற்ற இறுதி அறிக்கையில் சொல்லப்படவில்லை என்றும், தனிநபர் யாரும் இது தொடர்பாக விசாரிக்கப்படவில்லை என்றும் எதிரி தரப்பில் எடுத்துரைக்கப்பட்ட வாதம் ஏற்புடையதாகவே உள்ளது.

13.10) இந்நீதிமன்றமானது CRL OP No. 8815 of 2026 Vallarasu Vs State Rep.by, The Sub Inspector of Police,Prohibition Enforcement Wing, Cuddalore. Cr.No.7 of 2025 என்ற வழக்கில் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Tamil Nadu Liquor (Possession for Personal Consumption) Rules, 1996, (G.O.Ms.No.75, P & E, dated 19.04.1996, relied upon by the learned counsel for the petitioner, it is revealed that an individual can carry 4.5 litres of Indian made Foreign spirits for his personal use என்றும், Nicholas Vs Inspector Of Police and one another in Crl.O.P. (MD)No.12737 of 2023 என்ற வழக்கில் பாரா 5ல் The amended Rule of the Tamil Nadu Liquor (Possession of Personal Consumption) Rules, 1996, permits that a person can have possession of 4.5 liters of liquor for personal consumption. Though the allegation made against the petitioner is that he was selling the liquor for higher price, there is no record to show that the petitioner is keeping the liquor for selling the same for higher price. No person is complained that the petitioner is indulging in selling the liquor for higher price. When there is no record to show that the petitioner was holding the liquor for selling the same for higher price, it has to be presumed that he was holding the liquor for personal consumption. Further, when liquor is not prohibited and is available freely for Government fixed price without any license, why would anybody keep the liquor bottles for sale for a higher price. This allegation is beyond the comprehension and

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:55:49 +0530

cannot be accepted" என்றும் எடுத்துரைக்கப்பட்டுள்ளதை கவனத்தில் கொண்டும், மேற்படி முன்தீர்ப்புக்கள் இவ்வழக்கில் எடுத்துரைக்கப்பட்டுள்ள பொருண்மைகளுக்கு பொருந்துவதாகவே உள்ளது என்பதாலும், மேற்படி எதிரி தரப்பு வாதம் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

13.11)இவ்வழக்கில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாக அரசு தரப்பில் எங்கும் சொல்லப்படாத நிலையிலும், வழக்கில் சம்பவயிட சாட்சிகளாக யாரும் விசாரிக்கப்படாத நிலையிலும், மேலும், காவல்துறையினரை தவிர தனிநபர் சாட்சிகளாக யாரும் விசாரிக்கப்படாத நிலையிலும், பிரிவு 4(1)(C)TNP (Amendment) Actன் கீழ் தண்டிக்கப்பட வேண்டுமானால், வெறும் வைத்திருத்தல் (Possession) மட்டும் போதாது, அது "விற்பனைக்காக" இருந்தது என்பதை நிரூபிக்க வேண்டும் என்பதாலும், எதிரியிடமிருந்து விற்பனை பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்தாலும், 2024–ஆம் ஆண்டு திருத்தச் சட்டத்தின் படி, தண்டனைகள் கடுமையாக்கப்பட்டுள்ளதால், குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பு அரசு தரப்பிற்கு மிக அதிகமாக உள்ளது. எதிரியிடமிருந்து தான் வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டது என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய வேண்டிய கடமை அரசு தரப்பிடமே உள்ள நிலையிலும், அ.சா.1 இவ்வழக்கில்சொல்லப்பட்டுள்ள பொருட்களை சம்பவயிடத்தில் வைத்து எதிரியிடமிருந்து தான் கைப்பற்றினார்களா என்பதே கேள்விக்குறியாகியுள்ள நிலையிலும், வழக்கு சொத்தினை புகைப்படம் எடுத்து தாக்கல் செய்யவில்லை என்ற வாதம் ஏற்புடையதாக உள்ளதாலும், வழக்கில் கண்ட முக்கிய குறைபாடுகள்

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:55:54 +0530

காரணமாகவும், தொடர்புமை நிரூபணம் செய்யப்படாததால் சந்தேகத்தின் பலன் எதிரிக்கு கிடைக்கக்கூடியது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டான எதிரி தான் மதுபாட்டில்களை விற்பனைக்கு வைத்திருந்ததாக அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியுள்ளது. எனவே, எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்வதே உகந்ததாக இருக்குமென்றும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியாக, எதிரி மீதான பிரிவு 4(1)(C) TNP (Amendment) Actன் கீழான குற்றச்சாட்டு தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்து, எதிரி மேற்படி பிரிவின் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை பிரிவு 271(1) of BNSS Actன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. எதிரி இவ்வழக்கில் கொடுத்துள்ள பிணைமுறி மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்தாக உத்தரவிடப்படுகிறது. **இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணிணி மூலம் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜூன் மாதம் 30ம் நாள் செவ்வாய்கிழமை திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M., Date: 2026.06.30 17:56:03 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**அரசுத் தரப்பு சாட்சிகள் –**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | 29.06.2026 | திரு.கிருபாகரன் ( புகார்தாரர்) |
| அ.சா.2 | 29.06.2026 | திரு.மலைச்சாமி (புலன் விசாரணை அதிகாரி) |

**அரசுத் தரப்பு சான்றாவணங்கள்–**

| | | |
|---|---|---|
| அ.த.சா.ஆ.1 / அ.சா.1 | 21.03.2026 | தனி அறிக்கை |
| அ.த.சா.ஆ.2 / அ.சா.2 | 21.03.2026 | அத்தாட்சியில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் |
| அ.த.சா.ஆ.3 / அ.சா.2 | 21.03.2026 | முதல் தகவல் அறிக்கை |
| அ.த.சா.ஆ.4 / அ.சா.2 | 21.03.2026 | அத்தாட்சி |
| அ.த.சா.ஆ.5 / அ.சா.2 | 21.03.2026 | அழிப்பு சான்றிதழ் |

**அரசுத் தரப்பு சான்றுபொருட்கள் : இல்லை**

**எதிரி தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் :–**

இல்லை

J.AAFREEN BEGUM,
M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:56:08 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.

**குறிப்பு –**

1) இவ்வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

2) இவ்வழக்கு விசாரணையின் போது எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் அழைத்து விசாரணை செய்யப்படவில்லை.

3) இவ்வழக்கின் முடிவு குறித்து சிறு குறிப்பு காவல் துறையினருக்கு வழங்கப்பட்டது.

J.AAFREEN BEGUM,
M.COM., L.L.M.,

Digitally signed by J.AAFREEN BEGUM, M.COM., L.L.M.,
Date: 2026.06.30 17:56:14 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர் நத்தம்.